யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை (03-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 239

# படையினரின் காவலரண்கள் மீது ஓமந்தை பகுதியில் புலிகள் தாக்குதல்

## முறியடித்துவிட்டதாக அரச தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 3

ஓமந்தைப் பகுதியில் உள்ள 55 ஆவது படையணி மீது வெள்ளி இரவு 10.30 மணி அளவில் புலிகள் பெரும் தாக்குதலை ஆரம்பித்தனர்.

புலிகளின் தாக்குதலை தாம் முறியடித்து விட்டதாக அரச தரப்பு நேற்று அறிவித்தது.

புலிகள் அரசமுறிப்புக்குளம் ஊடாக வந்து இத்தாக்குதலை ஆரம்பித்ததாகவும் — புலிகளின் தற்கொலைப் படையினரும் இத்தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டனர் என்றும் வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலின் போது உதவிப் பொலீஸ் சுப்பிரிண்டன் ஈ கிரியெல்ல உட்பட பொலீஸார் தரப்பில் 39 பேரும் — கடற்படையினர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் முழு கட்டுப்பாட்டில்

கொழும்பு, ஓக. 3

ஓமந்தைப் பகுதியில் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான பகுதிகள் தற்பொழுது படையினரின் முழுக்கட்டுப்பாட்டில் இருப்பதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

சேதமடைந்த காவலரண்களை அவசரமாகத் திருத்தும் பணியில் படையினர் ஈடுபட்டிருப்பதாகவும் —

புலிகளின் தாக்குதல் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையை எந்த வகையிலும் பாதிக்கமாட்டாது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ‘செய் அல்லது செத்துமடி - 3’

கொழும்பு, ஓகஸ்ட் 3

ஓமந்தைப் பகுதியில் படையினரின் பாதுகாப்பு வலயங்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்கு ‘செய் அல்லது செத்து மடி – 3’ என்று பெயரிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே ஜூன் 10 ஆம் திகதி தாண்டிக்குளத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் ஜூன் 24 ஆம் திகதி பெரியமடுவில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் ‘‘செய் அல்லது செத்துமடி - 1’’, ‘‘செய் அல்லது செத்து மடி - 2’’ எனப் பெயரிடப்பட்டது தெரிந்ததே.

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையை படையினர் ஆரம்பித்த பின்னர் படையினர் மீது புலிகள் நடத்திய மூன்றாவது பெரிய தாக்குதல் இது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-21-174)

## 5 பாதுகாப்பு வலயங்களை ஊடறுத்துத் தாக்குதல்

கொழும்பு, ஓக. 3

ஓமந்தைப்பகுதியில் 5 பாதுகாப்பு வலயங்களை ஊடறுத்துப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக நேற்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

2 ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6 ஆம் பாதுகாப்பு வலயங்களே தாக்கப்பட்டுள்ளன.

மூன்றாவது பாதுகாப்பு வலயமே மோசமாகச் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வலயத்துக்குப் பொறுப்பாக இருந்த பொலீஸ் அதிகாரியான உதவிப் பொலீஸ் சுப்பிரிண்டன் ஈ கிரியெல்லவும் தாக்குதலின் போது கொல்லப்பட்ட பொலீஸாரில் அடங்குவார்.

புலிகள் தாக்குதல் நடத்திய பகுதிகளில் இருந்த காவல் நிலையங்கள் முற்றாக எரித்து அழிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-4-10-21-174)

## இதுவரை எந்தப் போர்முனையிலும் இல்லாதவாறு தொடர் ஷெல் வீச்சு

நேற்று முன்தினம் இரவு படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் ஆரம்பமானபோது இரு தரப்பில் இருந்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை 9.30 மணி வரை ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.

நிமிடத்துக்கு மூன்று ஷெல்கள் கூட ஏவப்பட்டதாகவும் இதுவரை எந்த ஒரு போர்முனையிலும் இவ்வளவு அதிகமான ஷெல் வீச்சுக்கள் இடம்பெறவில்லை என்றும் எமது வவுனியாச் செய்தியாளர் தெரிவித்தார்.

வவுனியா நகரில் உள்ள இராணுவ முகாமில் இருந்தும் ஷெல்கள் தொடர்ச்சியாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்டன.

ஷெல் சத்தங்களினால் வவுனியா நகரம் முழுவதும் அதிர்ந்ததாகவும் இரவு முழுவதையும் மக்கள் தூக்கமின்றிக் கழித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-4-10-21-164)

## நேற்று காலை வரை நீடித்த மோதல்

வவுனியா, ஓக. 3

நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் ஆரம்பித்த சண்டை நேற்றுக் காலை வரை நீடித்ததாக ‘திவயின’ பத்திரிகையின் செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே நேற்று பி.பி.சி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வெள்ளி இரவு ஓமந்தை நகரில் பொலீஸார் தங்கியிருக்கும் அரிசி ஆலை மற்றும் அதற்குச் சமீபமாக உள்ள கடற்படையினரின் முகாம் ஆகியவற்றின் மீது புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

இதற்கு முன்னர் புலிகள் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டனர்.

புலிகள் நினைத்த விதத்தில் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் பலியான பொலீஸாரின் சடலங்களைப் பார்த்த போது சடலங்கள் வெட்டப்பட்டு, ஆயுதங்களால் காயப்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

பொலீஸாரின் காவல் நிலைகள் மற்றும் நிர்வாகப் பகுதி ஆகியவை முற்றாக அழிக்கப்பட்டு தீயிடப்பட்டுள்ளன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிபிர் மற்றும் புக்காரா விமானங்கள் தாக்குதல்

வவுனியா, ஓக. 3

ஓமந்தை பகுதி படையினர் மீது வெள்ளி இரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து விமானப் படைக்குச் சொந்தமான எம்-24 தாக்குதல் ஹெலிகள், கிபிர் மற்றும் புக்காரா விமானங்கள் ஓமந்தையை அண்டிய பகுதிகள் மீது பாரிய வான் தாக்குதல்களை மேற்கொண்டன என அறிவிக்கப்படுகிறது. (இ-10)

## முரணான தகவல்கள்

வவுனியா, ஓக. 3

வெள்ளி இரவு ஓமந்தையில் உள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது இழப்புக்கள் குறித்து படையினர் தரப்பு வெளியிட்ட தகவல்களும் வவுனியாவிலுள்ள செய்தியாளர் தந்துள்ள தகவல்களும் ஒன்றுக்கொன்று முரணானதாக அமைந்துள்ளன என பி.பி.ஸி. தெரிவித்தது.

புலிகள் நடத்திய தாக்குதலில் இறந்த ஓர் உதவிப் பொலீஸ் சுப்பிரிண்டன் ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 52 படையினரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டன எனவும்-

ஆனால் உயிரிழப்புக்கள் இதைவிட அதிகம் எனவும் பி.பி.சியின் வவுனியா செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே தெரிவிக்கிறார்.

நூற்றுக்கும் அதிகமான விடுதலைப் புலிகளின் உடல்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன என அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்படி பி.பி.சி. தெரிவித்தது. (இ-10)

## ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலிகள் தாக்குதலில் ஈடுபட்டனர்

கொழும்பு, ஓக. 3

நேற்று முன்தினம் இரவு ஓமந்தைப் பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலிகள் பங்குபற்றினர் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இரு தரப்பிலும் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் ஆங்காங்கே கிடப்பதாகவும்—

அனுராதபுரம் மற்றும் வவுனியா நகர்களில் காயமடைந்த இராணுவத்தினரை சுமந்து விரைந்த ஹெலிக்கொப்ரர்கள் மற்றும் அம்புலன்ஸ் வாகனங்கள் பலவற்றை அவதானித்ததாக வவுனியா நகர்வாசிகள் தெரிவித்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி

யாழ். ராசி சில்க் உரிமையாளரின் தந்தை

**கனகசுந்தரம் பூலோகராசா**

அவர்களின் திடீர்மறைவுச் செய்தி கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

– ராசி சில்க் ஊழியர்கள்.

(48773)

## இதய அஞ்சலி

**கனகசுந்தரம் பூலோகராசா**

(உரிமையாளர்: ராசி சில்க், யாழ்ப்பாணம்- கொழும்பு)

அவர்களின் திடீர் மறைவினால் ஏங்கித்தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கோபிகா ஆடையகம்

[48775] உரிமையாளர், ஊழியர்கள்,

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.- கொழும்பு ராசி சில்க் உரிமையாளர்

**கனகசுந்தரம் பூலோகராசா**

அவர்களின் திடீர் மறைவைக் கேள்வியுற்று மிக்க துயர் அடைகிறோம். அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ராசம்ஸ்

உரிமையாளர், ஊழியர்கள்.

(48774)

## 1st DEATH ANNIVERSARY

Born: 04 — 05 — 1963



Died: 03 — 08 — 1996

**Mrs. MARY STELLA JUGUIN JOHNSON**

**( KALA )**

**(Teaeher, Durayappah Vidyalayam, Columbuthurai.)**

Precious is the light of the Lord is the death of his Saints.

( Psalm 116 - Verse 15 )

A wife who was fully devoted to her husband,
Fondly cares her children,
Takes a keen interest in teaching,
Always entertaining her. friends with a smile,
Ready to help her relatives in times of need;
A shining example in displaying patience and-forbearance,
Associating with relations and friends for the-past 31 years,
We are greateful to God in whom we believe,
For granting your last wish,
And saving you from eternal unrest,
We wish our prayers are heard by the merciful-Lord,
Who will grant her eternal rest.

Fondly remembered and sadly missed,

**By her Husband, Children & Relations.**

No. 46, Colombogam Road,
Chundukuli.

(48757)

## சவர்க்காரம்

யாழ். செயலக நலன்புரிச் சங்கம் அதன் அங்கத்தவர்களுக்கு 5 "சன்லைட்" சவர்க்காரங்களையும், தீப்பெட்டிகளையும் கட்டுப்பாட்டு விலையில் வழங்கி வருகின்றது. (ஐ-100)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1997 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II பௌதீகவியல், இரசாயனவியல், கணிதமும் புள்ளிவிவரவியலும், தாவரவியல், விலங்கியல்.
2. விரிவுரையாளர்(தகுதிகாண்) - பௌதீகவியல், இரசாயனவியல், கணிதமும் புள்ளிவிவரவியலும், தாவரவியல், விலங்கியல்
3. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / சித்த மருத்துவத்துறை.
4. விரிவுரையாளர் (தகுதிகாண்) / சித்த மருத்துவத்துறை.

**சம்பள அளவுத்திட்டம்:**

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11- ரூபா 15, 725 - 5 × 340 - 17, 425/- மாதமொன்றிற்கு.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 - ரூபா 19, 125 - 8 × 340 - 21, 845/- மாதமொன்றிற்கு.

விரிவுரையாளர் (தகுதிகாண்) - ரூபா 9, 350- 10 × 255 - 11, 900/- மாதமொன்றிற்கு.

குறிப்பு;-

சம்பளம் மற்றும் இதர படிகள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 703இன் பிரகாரம் வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் மக்கள் வங்கியின் யாழ். நவீன சந்தைக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும்,

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/– பெறுமதியான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 23×10 ச.மீ அளவுடைய சுயமுகவரியிடப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**பதிவாளர்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
(ஜி/1254)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா பீற்றர் தேவபாலசிங்கம்

முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளரும், சுண்டுக்குளியில் வசித்துவந்தவருமாகிய செல்லையா பீற்றர் தேவபாலசிங்கம் 1-08-1997 இல் மறுமைக்குள் பிரவேசித்தார்.

இவர் வடகோப்பாயைச் சேர்ந்த திரு. திருமதி செல்லையா தம்பதிகளின் புதல்வரும், பொலின் சுகிர்தத்தின் (சுகி) அன்புக் கணவரும், ஏஞ்சலா (கொழும்பு), கிறிஸ்ரெலா (இந்தியா), இவஞ்சலா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை அவரது இல்லத்தில் 5-08-97 அன்று மாலை 3-00 மணிக்கு (S. L. T.) நடைபெற்று கொட்டடியிலுள்ள மெதடிஸ்த சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
மனைவி
(சுகி)

இல.21, சோமசுந்தரம் அவன்யூ,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(48776)

## பொன்னையா துரைசிங்கம்

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா துரைசிங்கம் 1-08 1997இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா—அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பவளமணியின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம்(நல்லூர் பிரதேச சபை), ஜெயபாலசிங்கம் (ஸ்கந்தபுரம்), குணபாலசிங்கம் (கொழும்பு), புஸ்பராணி, கமலாசினி (யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நிர்மலா, சத்தியதேவி, மாலதி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜீவா, நிதி, பிரபு, பிரியா, தயா ஆகியோரின் அன்புப் பேரனும், நம்பிராசா, விசாலாட்சி இராசலட்சுமி, சோதிமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மார்க்கிறட்டம்மா, வல்லிபுரம், குமாரசாமி, இராமலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2-08-1997 சனிக்கிழமை நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பவளமணி
(மனைவி)

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(48763)

## திருமதி எலியாஸ் மாகிறற்

திருமதி எலியாஸ் மாகிறற் காலமானார். இவர் கொழும்புத்துறை வளன்புரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற எலியாஸ் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், கிறிஸ்ரீன், றோக், மேரி ஆன், அலோசியஸ் (யா.மா.ந.சபை), யசிந்தா, சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சூசைப்பிள்ளை, தேவதாசன், பீற்றர், சுகுணவதி, யசிந்தா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03- 08- 97இன்று ஞாயிறு காலை 9மணிக்கு 137, சென் பற்றிக்ஸ் வீதியில் இருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

எ. அலோசியஸ்
(மகன்)

137, சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(48756)

## திருமதி வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை

துன்னாலை வடக்கு வல்லியானந்தப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை 21 - 7 - 1997 இல் ஸ்கந்தபுரத்தில் இயற்கையெய்தினார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், நடராசா (இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆறுமுகம், பாக்கியம் (இளைப்பாறிய நெசவு ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சி. நடராசா (இளைப்பாறிய ஆசிரியை, யா / கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்), தம்பையா (தபாலதிபர், ஸ்கந்தபுரம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சகீதா (யாழ். பல்கலைக்கழகம்), பரீதா (யாழ். பல்கலைக்கழகம்), சுஜாதா, கவிதா, இராஜகணேசன் (ஆசிரியர், மந்துவில்), அனுசுயா, இராஜவரதன் (உள்ளூராட்சித் திணைக்களம், திருகோணமலை), ஸ்ரீவள்ளி, இராஜமோகன் (தென் ஆபிரிக்கா), ஜானகி, அலெக்ஸ் (லண்டன்), சசிகலா (ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), சசிகலா (சுகாதார மேற்பார்வையாளர்), இராஜவிசாகன் பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெனன், ஆர்த்தி, ஆர்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 - 7 - 97 இல் ஸ்கந்தபுரம் பொது மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
வே, நடராசா
(மகன்)

உதயபானு,
[illegible]ண்டி வீதி,
கொடிகாமம்.

(48748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடிய நாட்டு அகதிகள் தாய்லாந்தினுள் 'படை எடுப்பு'

## ராணுவம் எல்லையைத் திறந்து விட்டது

நொம்பென், ஓக. 3

கம்போடியாவில் ஆட்சியில் உள்ள பிரதமர் ஹுன்செனின் படையினருக்கும், பதவி கவிழ்க்கப்பட்ட முதலாவது பிரதமர் றணரித்தின் ஆதரவாளர்களுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடைபெற்று வரும் வட பகுதி எல்லைப் புறங்களில் இருந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முதற் தடவையாக சுமார் 7 ஆயிரம் கம்போடிய மக்கள் எல்லையைத் தாண்டி தாய்லாந்து நாட்டினுள் சென்றுள்ளதாக நிவாரணப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அகதிகள் எல்லையைத் தாண்டி உள்ளே வர தாய்லாந்து இராணுவம் அனுமதி வழங்கியிருக்கிறது.

பிரதமர் ஹுன் செனின் படையினரின் தாக்குதல்களுக்கு முகங் கொடுக்க முடியாத றணரித்தின் ஆதரவுப் படையினர் தாய்லாந்து எல்லைப் பகுதியை நோக்கிப் பின்வாங்கி வருகின்றனர்.

தாய்லாந்து எல்லையில் இருந்து 10 கிலோ மீற்றர் உள்ளே சண்டை அவ்வப்போது இடம் பெறுவதால் அப் பகுதிகளில் வசிக்கும் கிராமவாசிகள் ஆயிரக்கணக்கில் வீடுவாசல்களை விட்டு வெளியேறி வருகின்றனர்.

எல்லைக் காடுகளில் பின்வாங்கி அணி திரண்டு வரும் றணரித்தின் படையினர் அங்குள்ள 'கெமரூச்' கெரில்லாக்களின் சக்தி மிக்க அணி ஒன்றுடன் இணைந்து கொள்ள வாய்ப்பு உள்ளதாகவும்—

அவ்வாறு இணைய நேர்ந்தால் கம்போடியாவில் சண்டை நிலைவரம் தலைகீழாக மாறிவிடலாம் என்றும் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

இதற்கிடையில்—

கம்போடியாவின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்குத் தீர்வுகாண ஆசியானின் சமரச முயற்சி நேற்று மீண்டும் தொடங்கியது.

''ஆசியானின்'' மூன்று வெளியுறவு அமைச்சர்கள் நேற்று நொம்பெனில் இரண்டாம் பிரதமர் ஹுன் செனைச் சந்தித்து பேசினர்.

# 50 பலஸ்தீனியர் கைது!

ஜெருஸலேம், ஓக. 3

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலஸ்தீன பிராந்தியத்தில் நேற்று முன்தினம் இரவு திடீர்த் தேடுதல் நடத்திய இஸ்ரேலியப் படையினர் சுமார் 50 பலஸ்தீனியர்களைக் கைது செய்தனர்

ஜெருஸலேம் நகர குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும் தாக்குதல்களை ''ஹமாஸ்'' இயக்கத்தினர் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுவதால் தலைநகர் ரெல் அவிவின் கரையோரப் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதேவேளை பலஸ்தீன நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதிகளிலும் பலஸ்தீனியப் பொலீஸார் சந்தேக நபர்களைத் தேடி வலை விரித்துள்ளனர்.

ஜெருஸலேமின் மத்திய சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கு 'ஹமாஸ்' இயக்கம் உரிமை கோரியிருப்பது தெரிந்ததே. (ஐ)

## உலக அரங்கில்

### இந்தியக் கடலுணவுக்கு தடை

இந்தியா, பங்களாதேஷ், மடகாஸ்கார் ஆகிய மூன்று நாடுகளிலிருந்து மீன் உட்பட கடலுணவை இறக்குமதி செய்ய ஐரோப்பியச் சங்கம் தடை விதித்துள்ளது.

இந்த நாடுகளிலுள்ள கடலுணவு பதனிடும் தொழிற்சாலைகளைப் பார்வையிட்ட போது அவை சுத்தமில்லாத முறையில் - சுகாதாரமற்ற நிலையில்- இருந்ததால் இந்தத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகஜரோப்பியச்சங்கம் பிரசெல்ஸில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இந்த நாடுகளிலுள்ள தொழிற்சாலைகளின் மீது அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் போதுமானளவு இல்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தத் தற்காலிகத் தடை நவம்பர் மாதம் மறுபரிசீலனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# பாகிஸ்தான் நகர வீதிகளில் ஆபத்தான 2 ஆயிரம் குழிகள்

## உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

இஸ்லாமாபாத், ஓக. 3

பாகிஸ்தானில் முல்ரன் என்ற நகரின் வீதிகளில் காணப்படும் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய பெரும் குழிகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு நகர சபைக்கு நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

வீதியில் இருந்த ஆழமான குழி ஒன்றினுள் வீழ்ந்த யுவதி ஒருவர் உயிரிழந்ததை அடுத்தே இந்த நீதிமன்ற உத்தரவு விடுக்கப்பட்டிருக்கிறது.

வீதிகளில் உள்ள ஆபத்தான குழிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடுமாறு நகர நிர்வாகிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டதை அடுத்துச் சேகரிக்கப்பட்ட விவரங்களின்படி இத்தகைய 2 ஆயிரம் குழிகள் வீதிகளில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த ஆழமான குழிகளுக்குள் வீழ்ந்து உயிரிழப்போரின் எண்ணிக்கையும், காயமடைவோரின் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. (ஐ)

### பொல்பொட் குறித்து ஹுன் சென்

நொம்பென், ஓக. 3

கெமரூச் இயக்கத் தலைவர் பொல்பொட் மீது கடந்த வாரம் ''கெமரூச்'' இயக்கத்தினர் மேற் கொண்ட விசாரணை ஓர் அரசியல் மோசடி. எனவே அவரைக் கைது செய்து சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்த வேண்டும்.

கம்போடியாவின் இரண்டாவது பிரதமர் ஹுன் சென் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ)

### ஆயுதத் தடை நீக்கம்

லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அதிநவீன ஆயுதங்களை விற்பதற்கு நீண்ட காலம் இருந்து வந்த தடையை அமெரிக்கா நீக்கியுள்ளது.

இராணுவப் புரட்சிகளும், சர்வாதிகார ஆட்சிகளும் இடம்பெற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு அதி நவீன ஆயுதங்களை விற்பதற்கு 1970 களில் அமெரிக்கா தடை விதித்திருந்தது. தற்போது அங்கு நிலைமை குறிப்பிடத்தக்களவு மேம்பட்டிருப்பதாக வெள்ளை மாளிகை கூறியுள்ளது. அதனால் இனி மேல் ஒவ்வொரு நாட்டின் ஆயுதக்கோரிக்கையும் தனிப்பட்ட முறையில் பரிசீலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# நியூயோர்க்கில் குண்டுகள் மீட்பு!

நியூயோர்க்கில் புருக்லீன் வீடமைப்புத் திட்டப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 பாரிய குண்டுகளைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

இது தொடர்பாக மத்திய கிழக்கைச் சேர்ந்த மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. என்ன நோக்கத்துக்காக இந்தக் குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்பது குறித்துக் கருத்து எதுவும் வெளியிடப்படவில்லை.

ஜெருஸலேம் நகர குண்டு வெடிப்புக்கும் இச் சம்பவத்துக்கும் தொடர்பு இல்லை என்று நியூயோர்க் நகர மேயர் தெரிவித்தார்.

நியூயோர்க் நிலத்தடி ரயில் பாதையை அல்லது பிற இலக்குகளைத் தாக்கும் சதித் திட்டத்துக்கும் இதற்கும் தொடர்பு உண்டா என்பது குறித்து பயங்கரவாதத்துக்கு எதிரான சமஷ்டி கூட்டுப்படையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# பசுவில் பால் கறக்கத் தெரியும்; இனிமேல்தான் அரசியல்படிப்பேன்

## ராப்ரிதேவி' கூறுகிறார்



பீஹார் மாநிலத்தின் சர்ச்சைக்குரிய முன்னாள் முதலமைச்சரான லாலு பிரசாத் யாதவின் மனைவி ராப்ரிதேவிக்கு திடீரென அடித்தது 'யோகம்'!

எவருமே எதிர்பார்த்திராத வகையில் பீஹாரின் முதலமைச்சர் பதவியில் அமர்ந்துள்ளார் அந்த ஒன்பது பிள்ளைகளின் தாய்.

இந்தியாவின் நவீன ஜனநாயக அரசியல் நாகரிகம் கடைசி நிமிஷம் வரை அடுப்படியில் இருந்த அவரைத் திடீரென அரசியல் அரங்குக்கு அழைத்து வந்து விட்டிருக்கிறது.

''பசுவில் பால் கறக்கவும் சமைக்கவும் தெரிந்த நான் இனிமேல்தான் அரசியலைக் கற்றுக்கொள்ளப் போகிறேன்''— என்கிறார் ராப்ரிதேவி.

5 ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்த ராப்ரிதேவி பதவிப்பிரமாண வைபவத்தின் போது இந்தி மொழியை உச்சரிக்க முடியாமல் தடுமாறித் திக்குமுக்காடிப் போனார்.

''கவலையால் இரவு பூராவும் எனக்கு நித்திரையே வரவில்லை'' என்று முதல்வராகப் பதவியேற்ற மறுநாள் செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

முதல்வர் பதவியேற்றதும் அவரது அலுவலகத்துக்கு வந்த முதல் நாளே 50- க்கு மேற்பட்ட பைல்களை ஆராய்ந்த ராப்ரிதேவி தான் பார்த்த முதலாவது பைல் எது என்பது தெரியாமல் பின்னர் முழிக்க நேர்ந்தது.

''எனக்குத் தெரியவில்லை அவரைக் கேளுங்கள்'' என்று எடுத்ததற்கு எல்லாம் பதிலளித்தார்.

பத்திரிகைச் செய்தியாளர்களைக் கண்டால் ராப்ரிதேவி சங்கடப்படுகிறார். அவரிடம் கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விக்கும் நாணத்தால் முகம் சிவந்த நிலையில் திக்குமுக்காடி பதிலளிக்கிறார். கணவர் லாலு அருகில் இருந்த போது அவரது முகத்தைப் பார்த்து விட்டே கேள்விகளுக்குப் பதில் கூறினார். ஆனால் அவரது கணவர் தற்போது அவருடன் இல்லை.

முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் தான் தொடர்ந்தும் சமையல் வேலைகளைச் செய்யப் போவதாக ராப்ரிதேவி கூறினார். ''இன்று காலை கூட எனக்கும் கணவருக்கும் தேநீர் போட்டேன். தொடர்ந்து சமையல் அறைக்குச் செல்லப்போகிறேன்'' என்று அவர் கூறினார்.

கணவர் கைது செய்யப்பட்டால் நாடளாவிய ரீதியில் பயணம் செய்து அவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சதிமுயற்சி குறித்து மக்களுக்கு விளக்குவேன் என்றும் அவர் கூறினார்.

இந்தி மொழியில் கையொப்பமிடத் தெரிந்த ராப்ரிதேவியால் அம்மொழியில் சரளமாக உரையாடத் தெரியாது. பிராந்திய மொழியான போஜ்பூரி மொழியிலேயே அவரால் நன்கு பேச முடிகிறது.

தற்சமயம் லாலு பிரசாத் யாதவ் சரணடைந்து விட்டார். இந்தியாவில் மிகவும் வறுமையால் பாதிக்கப்பட்ட பீஹார் மாநிலத்தின் எதிர்காலம் ராப்ரிதேவியால் பிரகாசமடைய வாய்ப்பு உண்டா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அரசியல் வாசனையே தெரியாதவராக இருந்து பிற்காலத்தில் இந்தியாவின் சக்தி மிக்க பிரதமரானார் இந்திரா காந்தி.

சினிமா உலகில் பிரபல்யம் பெற்று அரசியல் அரங்கினுள் நுழைந்து தமிழ் நாட்டிடையே ஒரு கலக்குக் கலக்கியவர் செல்வி ஜெயலலிதா.

மிகவும் மதிக்கப்படும் குடும்பம் ஒன்றில் இருந்து அரசியலுக்கு வந்துள்ள சாதாரண குடும்பப் பெண்ணான ராப்ரி தேவியால் மட்டும் சிறந்ததோர் ஆட்சியை [illegible] யாது போகுமா? (ஐ)

# செவ்வாய்க் கிரகத்து வானிலை அறிக்கை

## 'பாத் பைண்டர்' அனுப்பியது

பாஸடெனா, ஓக. 3

செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கி ஆய்வுகளை மேற்கொண்டுள்ள ''பாத் பைண்டர்'' விண்கலம் செவ்வாய்க் கிரகத்தின் வானிலை தொடர்பான அறிக்கை ஒன்றைப் பூமிக்கு அனுப்பி வைத்துள்ளது.

பூமிக்கு கிடைத்துள்ள வானிலைப் படங்களின்படி செவ்வாய்க் கிரகத்துக்கு மேலாக நீல நிற வானம் தன்படவில்லை. ஆங்காங்கே மேகக் குவியல்கள் மட்டுமே தென்படுகின்றன.

நான்கு நிமிடங்களுக்கு ஒரு தடவை எனக் கணிப்பீடு செய்யப்பட்ட இந்த வானிலை அறிக்கையின் படி செவ்வாயில் சூரிய அஸ்தமனத்தின் போது சூரியன் வெள்ளை நிறமுடையதாகவும், அதனைச் சூழ இளம் சிவப்பு மேகமும் தென்படுகின்றன. (ஐ)

# வாள், ஈட்டி சகிதம் பீஹாரில் ஆர்ப்பாட்டம்!

பட்னா, ஓக, 3

முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் கைது செய்யப்பட்டிருப்பதை எதிர்த்து பீஹாரில் நேற்று முன்தினம் வேலை நிறுத்தம் நடைபெற்றது.

வாள்கள், ஈட்டிகள் சகிதம் தலைநகரில் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டம் செய்த லாலுவின் ஆதரவாளர்களுடன் பொலீஸார் மோதவேண்டி ஏற்பட்டது. இதனால் பலர் காயமடைந்தனர்.

வீதிகளைத் தடை செய்த ஆர்ப்பாட்டக்காரர்கள் வாகனங்களை அடித்துச் சேதப்படுத்தினர். ரயில் போக்குவரத்தும் முழுமையாகச் ஸ்தம்பித்தது.

பீஹாரில் ஆட்சியில் உள்ள ராஷ்ட்ரிய ஜனதாதன் கட்சியின் அழைப்பின் பேரில் நடந்த வேலை நிறுத்தத்தின் போது வன் செயலில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை மாநிலப் பொலீஸார் வெறுமனே பார்த்துக் கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்காதிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவிழா

சாவகச்சேரி மருதடிமேற்கு லக்ஷ்மி பதியில் இயங்கிவரும் பாலர் பாடசாலையில் நாளை 4 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கலை விழா நடைபெறும்.

- நிர்வாகி

(48762)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வி கமலராணி சபாரத்தினம்

மலர்வு: 22–02–1972

உதிர்வு: 04–07–1997

திதி: ஆடி அமாவாசை


ஆண்டாண்டு பலவாக ஆறாத் துயரில்
மூழ்க விட்டே
மாண்டு மறைவதற் கான நிலை
மறவம் இங்கே;

உமது பிரிவை ஆற்றாது துயரில் மூழ்கும்:
குடும்பத்தினர்.

கரணவாய்,
கரவெட்டி.

(48761)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் தியாகராஜா தவநேசன்

(யாழ். பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞானபீட 2 ஆம் வருட மாணவன் 93/94)

மலர்வு: 06–03–1972

உதிர்வு: 03–08–1996

வருடமொன்று சென்றாலும்
வாடுகிறோம் உன் நினைவில்
வித்தைகள் பலகற்று
வீசும் தென்றலாய்
முல்லை மணம் பரப்பி
வளாகத்தில் வளமான கல்விகற்று
வருவாய் பட்டதாரியாயென — உன்
வரவை எதிர்பார்த்தோம்.
நீயோ!
சாதனைகள் பல புரிய
வீறு கொண்ட....
விரைவாக எங்கு சென்றாய்?
களங்கமில்லா நின் முகத்தைக்
காணாது கலங்குகின்றோம்
பாரினிலே பாவிகள் நாம்;

- குடும்பத்தினர்

Dr. செல்லத்துரை வீதி,
சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(48714)

# சமய நிகழ்வுகளில்

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் கடந்த ஜூன் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை "திவ்வியப் பிரபந்தம்" நாலாயிரம் (4000) பாடல்கள் வாசித்துப் பயன் சொல்லல் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இந்நிகழ்வு தொடர்ந்து 51 தினம் இடம் பெற்று ஆடிப் பூர தினமான எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை பூர்த்தியடையும். (ஐ-30)

★ ★ ★

மன்னார்ப் பகுதியிலுள்ள பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலமாக விளங்கும் மருதமடு மாதாவின் ஆவணித் திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆதியம்பதி சந்திரசேகரர் ஆலயத்தில் ஆடி அமாவாசையை ஒட்டி இன்று காலை 6.30 மணிமுதல் விசேட பூசை வழிபாடுகளும், பிதிர்க்கடன் நிறைவேற்றுதலும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

நாரந்தனை சின்ன மடு மாதா திருவிழா நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகிறது.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு திருநாள் திருப்பலி நடைபெறும்.

சின்னமடு மாதா திருவிழா காணச் செல்லும் பக்தர்களுக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து பஸ் போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேவாலய பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (ஐ-4)

★ ★ ★

யாழ் புனித - மரியன்னை பேராலயத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை புனித - மரியன்னையின் விண்ணேற்பு விழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருவிழாத்திருப்பலி, திருச் சொரூபப் பவனி ஆகியவற்றுடன் நிறைவு பெறும் (ஐ – 39)

# நெடுந்தீவில் மண்எண்ணெய்

நெடுந்தீவு. ஒக 3

நெடுந்தீவு பலநோ. கூ. சங்கம் தனது எல்லைப்பரப்பில் உள்ள மக்களின் பாவனைக்கென போதிய அளவு மண்எண்ணையை யாழ். நகரில் இருந்து நெடுந்தீவுக்கு எடுத்து வந்துள்ளது. (ஐ-111)

# விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஒக. 3

வவுனியா இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில் கணித விஞ்ஞானப் பிரிவு 93/94 ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்கான 3 ஆம் ஆண்டு விரிவுரைகள் நாளை 4 ஆம் திகதி ஆரம்பமாகவிருப்பதாக கல்லூரி கணித விஞ்ஞான மன்றம் தெரிவித்துள்ளது. (இ-3)

# இரண்டாவது கட்ட கொடுப்பனவு

நெடுந்தீவு ஒகஸ்ட் 8

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்வோருக்கான ரூபா 5 ஆயிரம் இரண்டாவது கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

[illegible] 492 குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (ஐ-111)

# மீளக் குடியமர்வோருக்கான ஆலோசனைக் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஒக. 3

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த புன்னாலைக்கட்டுவன் வடக்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் மீளக் குடியமர்வதற்காக விண்ணப்பித்த குடும்பங்களைச் சேர்ந்த குடும்பத் தலைவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெற உள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10.00 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் வடக்கு, குப்பிளான் வடக்கு கிராம சேவையாளர் பிரிவினருக்கு குப்ளான் சொக்கவளவு விநாயகர் ஆலயத்திலும்—

முற்பகல் 11.00 மணிக்கு ஏழாலை வடக்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பத்தலைவர்களுக்கு ஏழாலை சைவ மகாஜனாக் கல்லூரியிலும் இக் கூட்டம் நடைபெறும்.

மீளக் குடியமர்தலுக்கு விண்ணப்பித்த மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த குடும்பத்தலைவர்களைத் தவறாது சமுகமளிக்கும்படி பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

# அறிவித்தல்

## யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம் [வண்ணை சிவன் கோயில்]

மேற்குறித்த சிவன் கோயிலுக்குரிய ஆதனங்களில் குடியிருப்பவர்களினதும், கடைகளின் வாடகைக்காரர்களினதும் கவனத்திற்கு:

1. நீங்கள் குத்தகை, வாடகை நிலுவைகள் ஏதாவது கொடுக்குமதியாக இருந்தால் முழுத்தொகையையும் 15-08 1997-க்கு முன்னர் வண்ணை சிவன் கோயிலின் பரம்பரைத் தர்மகர்த்தாவும், முகாமையாளருமான வைத்திலிங்கம் செட்டியார் கந்தப்பச் செட்டியாரிடம் செலுத்தும்படி கேட்கப்படுகிறீர்கள்.
2. கோயிலுக்குரிய கட்டடங்கள், ஆதனங்களின் வாடகைக்காரர்/குத்தகைக்காரர்கள் குறித்த தர்மகர்த்தாவின் எழுத்திலான சம்மதமின்றி வேறு நபர்களுக்கு பெயர்மாற்றம் செய்து கொண்டிருப்பின் அவைபற்றி 15-08-1997-க்கு முன் தர்மகர்த்தாவுடன் தொடர்பு கொள்ளவும். இல்லாவிடில் உங்களின் சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்காக உங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறியத்தருகிறேன்.
3. பின்வரும் ஆதனங்களின் குத்தகைக்காரர்கள் அனைவரும் 15 - 08 - 1997 ஆம் திகதிக்கு முன் குறித்த தர்மகர்த்தாவை சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்;

(அ) யமுனாரித்தோட்டம் (சிவன்கோயில் ஆதனம்)
(ஆ) அரியாலைத் தோட்டம் (சிவன் கோயில் ஆதனம்)
(இ) யாழ். வீதித்தோட்டம் (சிவன்கோயில் ஆதனம்)
(ஈ) பழம்றோட், அரசடி வீதி காணிகள் (சிவன் கோயில் ஆதனம்)
(உ) ஒட்டுமடம் (சிவன் கோயில் ஆதனம்)

மேலும் குத்தகை/வாடகை நிலுவைகள் அனைத்தையும் தவறாது 15-08-97-க்கு முன் குறித்த தர்மகர்த்தாவிடம் செலுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் L.L.B.,
சட்டத்தரணி & பிரசித்த நொத்தாரிஸ்,
சட்ட ஆலோசகர் வண்ணை சிவன்கோயில்,
உடுவில்.

(சி/1252)

# அத்துளு அம்பாள் விறகுகாலை

மேற்படி விறகுகாலையில் உள்ள மருத மரங்களை, கோயில் தேவைக்கென பல மாதங்களுக்கு முன்பு முற்பணம் செலுத்தி ஒதுக்கீடு செய்து சென்றவர்கள் இது வரையில் அவற்றை எடுக்கவில்லை; சம்பந்தப்பட்டவர்கள் மரங்களை ஒரு கிழமைக்குள் மிகுதிப் பணத்தைச் செலுத்திஎடுக்கவும். தவறின் 21-08-97 ஆம் திகதிக்குப்பின் அவை விற்பனைக்கு விடப்படும்.

மூ. பொன்னம்பலம்,
உரிமையாளர்.

(48729)

## வெளி வந்து விட்டது!

# பொருளியல் - G.C.E A/L 1997

## பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்புக்கள்

ஆசிரியர்: மா. சின்னத்தம்பி
விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

இதில்: சார்க் அமைப்பு
ஐரோப்பிய சங்கம்
நாப்ஃறா
எபெக் உலகவர்த்தக நிறுவனம்
உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தை
போன்ற பலவிடயங்கள் உள்ளன.

கிடைக்குமிடம்:

# ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(48758)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்

**யாழ். கிளை**

**வலி. வடக்குப் பிரிவு**

## முக்கிய அறிவித்தல்

**14 - 08 - 97** ஆம் திகதிக்கு முன்னர் அங்கத்துவத்தை புதுப்பிக்குமாறும், புதிதாகச் சேர்வதற்கும் பின்வரும் எவருடனும் தொடர்பு கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றோம்.

திரு. சி. சிவமகாராசா, தலைவர், தெல். ப. நோ. கூ. ச. மல்லாகம்;

திரு. சி. நாகேஸ்வரன், செயலாளர், M. S லேன், கோண்டாவில் கிழக்கு;

புதன் கிழமைகளில்

திரு வை. பாலசுப்பிரமணியம், பொருளாளர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன அலுவலகம் இல. 65, கன்னாதிட்டி வீதி (சந்தி), யாழ்ப்பாணம்.

**பொதுச்சபைக் கூட்டம்**

**காலம்: 18-08-97** திங்கள் மு. ப. 10. 30 மணி.

**இடம்:** யா / மல்லாகம் மகா வித்தியாலயம்.

*14 - 08 - 97* ஆம் திகதிக்கு முன்னர் அங்கத்துவத்தைப் புதுப்பித்த அனைவரும், ஆயுட்கால அங்கத்தவர்களும் கலந்து கொள்ளவும். அங்கத்தவர்களின் தற்போதைய முகவரியைத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கௌரவ செயலாளர்,
இ. செ. ச. வலி. வடக்குப் பிரிவு.

(48752)

# தம்பாட்டியில் பொருள் உதவி

யாழ்ப்பாணம், ஒக. 3

தம்பாட்டியில் மீண்டும் மீளக் குடியேறிய 27 குடும்பத்திற்கான உலர் உணவும் மற்றும் அன்றாடப் பாவனைக்கான பொருள்கள் மற்றும் நிதிஉதவியும் ஈ.பி.டி.பி. தீவக அரசியல் அமைப்பாளர் மனோகரனால் அண்மையில் வழங்கப்பட்டன. அத்துடன் தம்பாட்டி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பாத அணிகளும் கொப்பிகளும் வழங்கப்பட்டன.

இதேவேளை தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளில் தண்ணீர்த் தொட்டிகள் அமைப்பதற்கான ஆய்வுக் கருத்தரங்கும் இப்பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளது.

(ஐ)

# பாலர் ஆசிரியராக..

பயிற்சிக்கு க.பொ. த. (சா/த) தகைமையும், மேல் தகைமையுடையோரும் தபால் வழியில் ஆறு மாதத்தில் பயிலலாம். எழுதுக:

**பாலர் ஆசிரியர் சங்கம்**

20, அச்சக ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(47356)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**இலங்கை**

தீந்தைகள் கட்டடப் பொருள்களை வழங்குவதற்கான

## கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு எமல்சன் / எனாமல் தீந்தைகளும் மற்றும் கட்டடப் பொருள்களும் வழங்குவதற்கு, மேற்குறித்த பொருள்களை குடா நாட்டிற்கு கொண்டு வருபவர்களிடமிருந்தும், விற்பனை செய்பவர்களிடமிருந்தும் பொறியிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இப்பொருள்களை வழங்க விரும்புவோர் யாழ். பல்கலைக்கழக காசாளரிடம் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 250 இனை செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் உதவி நிதியாளர் வழங்கலுடன் தொடர்பு கொண்டு வழங்கப்பட வேண்டிய பொருள்களுக்கான பட்டியலைப் பெற்று 1997 - 08 - 08 ஆம் திகதி மு. ப. 10. 00 மணிக்கு முன்பதாக தங்களது விலைக்கூற்றினை நேரிலோ அன்றேல் கடித மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கூறுவிலைகள் அன்றைய தினம் மு.ப.10. 30மணிக்கு திறக்கப்படும். கூறுவிலைக்கான கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் யூ வே/பி ஓ / 1997 என எழுதப்பட்டு, நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பதிவாளர்

(இ/1249)

# 3 ஆவது பிறந்ததின வாழ்த்து



செல்வன்

## ★ ஜெயகாந்தன் ஜெயலதன் ★

சங்கானை பாரதி வீதியைச் சேர்ந்த

**ஜெயகாந்தன் சிறிலதா**

தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜெயலதன் இன்று (03 - 08 - 1997) தனது மூன்றாவது பிறந்த நாளை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, ஜேர்மனியிலுள்ள பெரியப்பா மற்றும் பெரியம்மா, சித்தப்பா, சித்தி, பெரியத்தை, மாமா, சின்னத்தை, சின்னமாமா, பெரியமாமா, பெரியத்தை, கொழும்பிலுள்ள ஆசை மாமா, ஆசை அத்தை, பெரியப்பா, பெரியம்மா சித்தி, சின்னமாமா, மச்சான்மார், மச்சாள்மார் அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருளால் சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:

**இ. ஜெயகாந்தன்**

பாரதி லேன்,
சங்கானை.

(48584)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் சின்னத்தம்பி செல்லையா

பிறப்பு: **10—08—1915**

இறப்பு: **05—07—1997**

அன்பின் மணிவிளக்கே!
ஆருயிர்த் தெய்வமே!
தந்தையாகி நின்று — எமை
வளர்த்த ஆசானே!
எம்மைக் கதற வைத்து
எங்குதான் சென்றனையோ?
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தால்
நாமுங்கள் பிள்ளைகளாய்
பிறக்க வரம் வேண்டும்.

எமது குல தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் அளித்தது பற்பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் 03-08-97 (ஞாயிற்றுக்கிழமை) இன்று எமதில்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிறி வெற்றிலைக்கடை,
மார்க்கற் உட்புறம்,
கொடிகாமம்.

(48709)

அமரர் பொன். இராஜகோபால்

அவர்களுக்கு

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அத்தனை பணிகளுக்கும் கடந்த 25 ஆண்டுகளாகத் தனது எழுத்தாலும், உள்ளத்தாலும் பணிபுரிந்து வந்த ஒரு பெருமையாளரை நாம் இன்று இழந்து தவிக்கிறோம். பொன்மனம் படைத்தவர் இவர். இவருடைய வீரகேசரி வார இதழ்ப்பணியும், பத்திரிகைத்துறை வாழ்வும் மிகவும் மகத்துவமானது. எங்கள் தேவஸ்தானத்துக்குப் பலமுறை நேரில் வந்து பார்வையிட்டு எமக்கெல்லாம் ஊக்குவிப்பு வழங்கிய உயர்ந்த உள்ளம் படைத்தவரை வாழ்த்துவதற்கு எமக்கு வார்த்தைகளே போதாது. எனவே அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பது ஒன்றே எமது தலையாய கடனாகும். அமரர் அவர்களின் பிரிய மனையாள் அவர்களுக்கும், பிள்ளைகளுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் புனித சேவைகளை என்றும் எமது உள்ளத்திருத்தி அஞ்சலிப்போமாக.

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(48760)

# இதய அஞ்சலி

எமது சங்க பால் நிலைய முகாமையாளர்

**திரு. க. மலர்வண்ணன்**

அவர்களின் அன்புச் சகோதரி

## செல்வி மைதிலி கந்தசாமி (லீலா)

அவர்கள் **30—07—1997** இல் காலமானார்.

அன்னாருக்குஎமது அஞ்சலியைச் செலுத்துவதுடன், இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பணியாளர்கள்,**
**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

(48753)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் (புளியடியில்) சுண்டுக்குளிப் பகுதியில் உள்ள அரியாலையில் 75 பரப்பு பெரும் விளைச்சல் வயற்காணி, தெருக்கரையில் கண்டிறோட்டிற்கு அண்மையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 142, Base Line Road, Colombo-9 தொலைபேசி எண்:-692770. [48707]

யாழ் பல்கலைக்கழகத்திற்கு சமீபமாக சகல வசதிகளுடன் கூடிய வீடு 2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி சத்தியபாலன். இல. 73, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [48706]

ஆண்டு — 5 க்கான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினா விடைகள் தொகுதி I தொகுதி II விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.04 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி/1235]

சுத்த இன Dash Hound, 2½ மாத 1 சோடிக்குட்டிகளும் தாய் நாயும், அத்துடன் 6 மாத சணல் கடாய் ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- V பத்மநாதன், சொத்துக்கட்டி ஒழுங்கை, நவாலி தெற்கு, மானிப்பாய். [48754]

இளம் வான் கோழிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மனோன்மணி மாஸ்ரர், அரசடி நவாலி தெற்கு, மானிப்பாய், [48755]

## தவறிவிட்டது

திருமதி பு. செல்வரத்தினராசா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. 435413463V, விசேட அடையாள அட்டை, பாஸ்போட் வேறு பல முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைப்பை வளாக வீதிக்கும், திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 54, வளாக வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [48750]

சிவஞானம் தேவநேசன் என்பவரது தேசிய அடையாள அட்டை இலக்கம் 662872040V விசேட அடையாள அட்டை, பாஸ் என்பன 23-07-97 அன்று கண்டி வீதி, நவீன அரிசி ஆலையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் த. அருளம்பலம், இல. 23, 3 ஆம், குறுக்குத்தெரு, கொழும்புத்துறையில் ஒப்படைக்கவும். (48759)

## மணமகன் தேவை

பட்டதாரி ஆசிரியர் 39 வயது மணமகனுக்கு ஆசிரியை மணமகள் தேவை. 'அம்பாள் திருமண சேவை' ஸ்ரீலங்கா அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணம். [48742]

டாக்டர், எஞ்ஜினியர் எக்கவுண்டன், ஆசிரியர், கிராமசேவையாளர், வியாபாரம் போன்றவர்களுக்கு மணமகள் தேவை. குறிப்பு படத்துடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: ஸ்ரீமுருகன் சோதிட நிலையம், திருஞானசம்பந்தசர்மா, நல்லூர் வடக்கு வீதி, நல்லூர், (செவ்வாய்க்கிழமையில் திறக்கப்படமாட்டா). [48712]

## ஆங்கிலம், கணிதம்

விசேடமாக (விடுமுறைக்குள்) ஆண்டு 6 தொடக்கம் O/L வரை விசேட பெறுபேறடைய வாரம் 5 மணித்தியாலம் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85. சிவன்கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [48733]

## ஆசிரியர் தேவை

ஆண்டு 8 மாணவனுக்கு வீட்டில் வந்து பாடம் படிப்பிக்க ஆசிரியர் தேவை. தகுதியுடையோர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: இ. மகாதேவா, 626, பருத்தித்துறை வீதி (நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக) நல்லூர், யாழ்ப்பாணம். ஏனைய விவரங்கள் நேரில் தீர்மானிக்கப்படும். [48739]

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு, தொடர்பு: இல.15, மெமோறியல் லேன், மானிப்பாய். [48582]

## தேவை

பெண்களுக்குரிய ஆடைகள் வெட்டித் தைக்கக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை. ஞாயிற்றுக்கிழமை நேரில் வந்து சந்திக்கவும். சி. கந்தையா, அரசடி அம்மன் கோயில் வீதி, திருநெல்வேலி. [48727]

---

ADVANCED TECHNICAL INSTITUTE STUDENTS ASSOCIATION JAFFNA

## பெருமையுடன் வாழ்த்தி வரவேற்கிறோம்

எமது நிறுவனத்தின் முதலாவது
இயக்குநராகப் பதவியேற்றுள்ள

**திரு. T. இராஜரட்ணம்**

அவர்களையும்

கல்வி ஒருங்கிணைப்பாளராகப் பதவியேற்றுள்ள

**திரு. V. S. கீதபொன்கலன்**

அவர்களையும்

வருக, வருக என வாழ்த்தி வரவேற்கின்றோம்,

மாணவர் ஒன்றியம்,
உயர் தொழில் நுட்பநிறுவனம்.

யாழ்ப்பாணம். (48745)

---

## கண்ணீர் அஞ்சலி

புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தை

**அருட்திரு. அன்ரன் மத்தாயஸ்**

அவர்களின் மைத்துனர்

**A J. பெனடிக்றபாலன்**

(கொழும்பு தெற்கு, உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்கள் கொழும்பில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பங்கு மக்கள்
புனித ஆசிர்வாதப்பர் ஆலயம்.
(48751)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**முத்துக்குமாரு சந்திராதேவி**

பிறப்பு: 13—04—1945
இறப்பு: 13—08—1996

ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எங்கள் துயர் - என்றும்
எமது அன்பு உம்முடனே இருக்கும்

பிரிவில் துயருறும்:
குடும்பத்தினர்.

41/3, கொண்டல் வீதி,
நல்லூர். (48734)

---

## கண்ணீர் அஞ்சலி

ராசி சில்க் உரிமையாளர்

**ரவிதரன், சசிதரன்**

ஆகியோரின் பாசமிகு தந்தையார்

**கனகசுந்தரம் பூலோகராசா**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**வினோ நகைப் பூங்கா**
உரிமையாளர், ஊழியர்கள்.
(48749)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 18 — 12 — 1931

கற்பக விநாயகர் அடியில்: 14 — 08 — 1996



**பிரம்மஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் மகேஸ்வரக் குருக்கள்**
**(சின்னப்பா ஐயர்)**

(பன்னாலை வரஸ்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தான ஆதீனகர்த்தா)

சீர்மேவு புகழ் பன்னாலை வரஸ்தலத்தின்
ஆதீனகர்த்தா ஆனவன்
பாரீபரவும் அவ்வூரின் சிரேஷ்ட குருவானவன்
கார்கொண்ட ஆடி அமாவாசைத் திதி
நன்னாளிலே பேர் கொண்ட சின்னப்பா ஐயர்
மறைந்தானிவ்வுலகை நீத்து.

அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்கிறோம்.

ஓம் சாந்தியருள்க!

மனைவி, மக்கள்.

கரைப்பிரான் பிள்ளையார் கோயில்,
ஆனைக்கோட்டை.
(48737)

---

## முதலாம் வருட நினைவஞ்சலி

மலர்வு: 29 — 04 — 1939



உதிர்வு: 13 — 08 — 1996

**திருமதி ஜெயமணி தர்மலிங்கம்**

திதி: ஆடி அமாவாசை: 03—08—1997

எங்கள் குடும்ப வானில் உதயமாகி
அணையாத தீபமாய் எரிந்த ஆருயிர்த் தெய்வமே!
நின் கறைபடா வாழ்வு கண்டு மகிழ்ந்தோம்;
ஆனால் அது நிறைவு பெறாதது கண்டு
மனமுடைந்தோரானோம்.
எங்கள் இதயக் குளத்தில்
பூத்திருப்பது தாமரை மலர்களல்ல;
துன்பக் கதிரவனின் வருடலில்
பூத்திருக்கும் சோகமலர்கள்.
ஆண்டொன்று சென்றாலும்
அகலுமோ உந்தனது பாசம்
சொர்க்கத்தில் சுகமாய் வாழத்
துதிக்கின்றோம் இறைவன் பாதம்!

துயருறும்:
கணவன், தாய், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மச்சான்,
மைத்துனிகள், சுற்றத்தார்.

இ. தர்மலிங்கம்,
மல்வம், உடுவில்.
(47347)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் பொது நூலகம்

# உதயன்

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம் — திருகோணமலை கப்பற் சேவை நிறுத்தப்பட்டு மூன்று வாரங்கள் கழிந்து விட்டன. அது மீண்டும் தொடங்குவதற்கான நம்பிக்கையான அறிகுறி எதுவும் இல்லை. நாளுக்கொரு காரணமும் பொழுதுக்கு ஒரு முடிவுமாக நாள்கள் கடந்து கொண்டிருக்கின்றள; கழிகின்றன

யாழ்ப்பாணத்தில் இருந்து தமது அவசிய தேவைகள் கருதி வெளிமாவட்டங்களுக்குச் சென்றோர்

வெளி மாவட்டங்களிலிருந்து குடாநாட்டுக்கு வந்தோர்—

யாழ்ப்பாணம் வருவதற்கெனக் கப்பலைப் பிடிப்பதற்காக திருகோணமலை சென்றடைந்து இடைவழியில் சிக்குண்டோர்

என்று ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாமல் அவஸ்தைப்படுகிறார்கள்; அவலப்படுகிறார்கள்; கஷ்டப்படுகிறார்கள்.

பாவியார் போகும் இடம் பள்ளமும் திட்டியும் என்பார்கள், அதே போல தமிழர்கள் வீட்டில் இருந்தாலும் வீதியில் நடந்தாலும், சொந்த ஊரில் இருந்தாலும் பிறர் ஊரில்தங்கினாலும், எங்கும் வேதனையும் சோதனையும், அவலமும் அவஸ்தையும் தான் என்ற நிலையாகி விட்டது. கப்பல் பயணமும் அதற்கு விதி விலக்காகி விட வில்லை.

கப்பல் ஒன்று தாக்கப்பட்டும், இன்னொன்று கடத்தப்பட்டும் இடம்பெற்ற நிகழ்வுகளின் பின்னரே பயணிகள் கப்பற் சேவை நிறுத்தப்பட்டது. அது பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விவகாரம் அரசியல் விவகாரமும் கூட.

குடாநாட்டு மக்களின் போக்குவரத்துக்குத் தடங்கல் உண்டு பண்ணும் விவகாரத்தை பாதுகாப்பு- அரசியல் பலப்பரீட்சைக்கு உரியதாக்குவது மக்களுக்கே பெரும் கஷ்டங்களைக் கொடுக்கும் என்பதனை இரண்டு சாராரும் உணர்ந்து கொள்வது நல்லது.

யாழ்ப்பாணத்தில் இப்போது அரச நிர்வாகம் நடைபெறுவதால் மக்களின் போக்குவரத்துக்கு வசதி செய்ய வேண்டியது அதன் முழுப் பொறுப்புமாகும். அதற்கேற்ற விதத்தில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைந்து செயற்பட வேண்டும்.

கப்பல் பயண சேவை விவகாரம், தடங்கல்களை நீக்குவதற்கான பொறுப்பு, காற்பந்தாட்டப் பந்து போல அங்கும் இங்குமாக உதைக்கப்பட்டு வருவது எந்த வகையிலும் உகந்ததல்ல.

கப்பல் பயண சேவை எப்போது ஆரம்பமாகும் என்று நாளாந்தம் எதிர் பார்த்து, இன்று நாளை என்று மக்கள் ஏமாந்து போகும் நிலையை நீடிக்க விடுவது அரசுக்கு நல்ல பெயரை வாங்கித் தரமாட்டாது.

குடாநாட்டுக்கும் பிற மாவட்டங்களுக்கும் தரை வழிப்பாதை இல்லை.விமான சேவை செலவானது; சாதாரண மக்களுக்குக் கட்டுபடியாகாதது. கப்பல் பயண சேவையும் முடங்கிப் போனால் யாழ். மக்கள் சிறை வைக்கப்பட்டவர்கள் ஆகிவிடுவர்.

எனவே இது விடயத்தில், அதிகாரிகள் மட்டத்திலான குளறுபடிகளைக் களைந்து அரச உயர்மட்டம் நேரடிக் கவனம் செலுத்த வேண்டும்.

# சேதமடைந்த நான்கு சிலைகள் புனரமைக்கப்பட்டு திரை நீக்கம்

### யாழ். நகரில் நேற்று வைபவம்

யாழ்ப்பாணம், ஓக. 3

குடாநாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது சேதமடைந்த யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள திருவள்ளுவர், ஔவையார், சோமசுந்தரப் புலவர், மகாத்மா காந்தி ஆகிய பெரியவர்களின் திருவுருவச் சிலைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு நேற்று திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வினை ஒட்டி நேற்று யாழ். ஆஸ்பத்திரி வீதி அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த வர்த்தகர்களிடமிருந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட சுமார் 80 ஆயிரம் ரூபா செலவில் இப்புனர்நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

சிலைகள் திரை நீக்கம் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

முதலாவதாக சத்திரத்துச் சந்தியில் திருவள்ளுவர் சிலையை மில்க்வைற் அதிபர் க. கனகராசா திரை நீக்கம் செய்ய வர்த்தக சங்கத் தலைவர் தியாகராசா குஞ்சிதபாதம் மலர் மாலை அணிவித்தார்.

இரண்டாவதாக ஔவையாரின் திருவுருவச் சிலையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் திரை நீக்கம் செய்ய எஸ். வி. எம். முகாமையாளர் தியாகலிங்கம் மலர் மாலை அணிவித்தார்.

மூன்றாவதாக சோமசுந்தரப் புலவரின் திருவுருவச் சிலையை பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம முதல்வர் சித்ரூபானந்தா திரைநீக்கம் செய்ய புளொட் அமைப்பின் பிரசாரப்பொறுப்பாளர் செல்லையா கிருபைராசா மலர்மாலை அணிவித்தார்.

நான்காவதாக மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலையை 512 ஆவது பிரிக் கேட்பொறுப்பாளர் பிரிகேடியர் ஜாமினி ஜயசுந்தர திரை நீக்கம் செய்ய சிற்றிமெடிக்கல் உரிமையாளர் சிறில் மாலை அணிவித்தார்.

மில்க்வைற் அதிபர் க கனகராசா திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து உரை நிகழ்த்துகையில்:

''வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க'' என்ற வாக்கியத்துக்கு அமைவாக நாம் எல்லோரும் எமது வாழ்க்கையை அமைத்து எமக்கும் பிறருக்கும்தொண்டு செய்யத் தொண்டு உள்ளத்துடன் வாழப்பழக வேண்டும். ''தேசசேவையே தெய்வத் தொண்டு'' என்பதற்கு இணங்க ஒவ்வொருவரும் சமயப் பெரியார்களின் வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்து வாழப்பழக வேண்டும்.

''வீடுகள் தோறும் திருக்குறளைப் பரப்பவேண்டும்; பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் யாவும் தகுந்த முறையில் திருக்குறளைப் போதிக்க வேண்டும். வள்ளுவர் வாழ்க்கை நெறியைநாம் பின்பற்றி அவ்வழியில் நாம் அணுகித் தொண்டு உள்ளம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும்'' என்றார்.

பிரிகேடியர் காமினி ஜயசுந்தர உரையாற்றுகையில் ''நான் 25 வருடங்களுக்கு மேலாகத் தமிழ் பேசும் மக்களுடன் உறவு கொண்டவன் என்ற முறையில் தமிழ் மக்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் பற்றி நன்கு அறிவேன்.

இப்பிரச்சினைகள் விரைவில் தீர்ந்து நாம் சகோதரர்களாக வாழ வேண்டும்.''

''நான் மிகவிரைவில் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளேன். எனக்குப் பதிலாக இங்கு வருபவருக்கு நீங்கள் எனக்கு அளித்த ஆதரவை அளித்துச் செயற்படுங்கள்'' என்றார். (இ-15-30)

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஓக. 3

லங்காசிமெந்து லிமிட்டெட் ஊழியர்களின் ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் காலை 9 30 மணிமுதல் 12 30 மணி வரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## சோதிட வகுப்பு

யாழ். தமிழ்ச் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தினால் வாராந்தம் நடத்தப்படும் சோதிட வகுப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (ஐ-30)

### உற்பத்தி போதாது

# அரிசித் தட்டுப்பாடு நாட்டில் ஏற்படும்

கொழும்பு, ஓகஸ்ட் 3

இவ்வாண்டு காலபோக, இடைப்போகம் ஆகியவற்றில் கிடைக்கும் நெல்லின் அளவு நாட்டின் பாவனைக்குப் போதுமானதாக இருக்காது எனவும்—

சுமார் 3 லட்சம் மெற்றிக்தொன் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும்—

உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சும், உணவு அமைச்சும் தெரிவித்துள்ளன.

இதனால் தனியார்துறை மூலம் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து அரிசித் தட்டுப்பாட்டை நீக்க உணவு அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசி எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் இலங்கை வந்து சேரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் 3 லட்சம் மெற்றிக்தொன் அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதால் பிரச்சினை தீர்ந்துவிடாது என விவசாய அமைச்சு அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர்.

தனியார்துறையைச் சேர்ந்த மொத்த வியாபாரிகளும், கமத்தொழில் அமைப்புகள் சிலவும் தற்போதே நெல்லைச் சேர்த்து தேக்கி வைத்திருப்பதாலேயே அரிசி விலை உயருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

# பகிர்ந்து கொள்ள மனமிருந்தால் அமைதியும் மகிழ்ச்சியும் நிச்சயம்

வேதாகமத்திலே, புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்தியாளர்களும் கூறும் ஒரே ஒரு புதுமை அப்பங்கள் பலுகின புதுமைதான். அப்பங்கள் பலுகின நிகழ்ச்சிக்கு ஆழ்ந்ததோர் பொருளுண்டு. அது சில அப்பங்கள் பலவாக மாறின என்பதன்று; பகிர்ந்து கொள்வது எவ்வளவு உயர்ந்தது என்று உணர்த்த இது சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.

அன்று நடந்த நிகழ்ச்சி தான் என்ன? இஸ்ராயேல் மக்கள் கொண்டாடுகின்ற விழாக்களிலே முக்கியமான மூன்று விழாக்களில் ஏதாவது ஒன்றுக்கு ஆண்டு தோறும் அவர்கள் ஜெருசலேமுக்கு செல்வது வழக்கம். வடக்கே கலிலேயாவில் இருந்தவர்கள் மத்திய பகுதியில் இருந்த சமாரியருடன் உறவற்று இருந்தமையால் யோர்தான் நதியைச் சுற்றித்தான் ஜெருசலேம் செல்வார்கள். கலிலேயாவிலிருந்து தெற்கு நோக்கி ஜெருசலேம் செல்கையில் கலிலேயாக் கடற்கரையில் சற்று இளைப்பாறினார்கள்.

அவ்வேளையில்தனிமையான ஓர் இடத்தில் பெருந்திரளாக வந்த மக்களுக்கு இயேசுவின் போதனையைக்கேட்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. நெடுநேரமாக இயேசுவின் போதனையில் மூழ்கி இருந்தவர்களுக்கு திடீரென சிறுகுடல், பெருங்குடலை விளங்குவது போன்ற பசி ஏற்படுகின்றது. பல பேர் வறியவர்களாகவும் சிலபேர் பெரிய புள்ளிகளாகவும் நிறைய உணவுடனும் இருந்தனர். இயேசுவும் சீடர்களுமாக 5 அப்பங்களும் 2 மீன்களும் தம்மிடையே வைத்திருந்தனர். உண்பதற்கு ஏதாவது வாங்கிக் கொள்ளுமாறு மக்களை அனுப்பிவிடுமாறு தான் சீடர்கள் இயேசுவிடம் கூறினர். ஆனால் இயேசு அக்கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை ''நீங்களே அவர்களுக்கு உணவுகொடுங்கள்'' என்று அழுத்தமாகக் கூறி விட்டார்;

சீடர்கள் எளிதில் விடுவதாக இல்லை, தாங்களே போய் உணவு வாங்கி வருவது இயலாத காரியம் என்று சொல்லிப்பார்த்தார்கள். மக்களை ஐம்பது ஐம்பதாக வரிசையாக அமரச்சொல்லி சீடர்களிடம் ''பகிர்ந்து கொள்ள'' கூறினார் இயேசு. மற்றவர்கள் என்ன செய்தார்கள்? ஐம்பது ஐம்பது என்று அமர்ந்திருந்தவர்களிடம் இயேசு தம்மிடமுள்ள உணவைப் பகிர்ந்து கொள்ளச் சொல்லியிருக்கலாம். அல்லது இயேசுவும் அவரது சீடர்களும் தங்களுடைய உணவைப்பகிர்ந்து கொண்டதைப் பார்த்து மக்களும் தாமாகவே தங்களது உணவுக் கூடைகளைத் திறந்து உணவைத் தமக்குள்ளே பகிர்ந்து கொண்டிருக்கலாம்.

### பகிர்தலால் நிகழும் அதிசயம்

இயேசுவின் போதனையை துல்லியமாகக் கேட்டவர்களின் வாழ்விலே ஆழமான மாற்றம் ஏற்படுகிறது. நடந்தது ஒரு புதுமை! இத்தனை மனிதர்கள் திடீரென்று தங்கள் உணவின் மேல் இருந்த பற்றினை விட்டு விட்டு, அவ்வுணவை ஒருவர் மற்றவரோடு பகிர்ந்து கொண்டது மட்டுமன்றி தேவைக்கு அதிகமாகவே உணவு இருந்ததை உணர்ந்தார்களே அது பெரிய புதுமை அன்றோ!

பன்னிரண்டு கூடைகள் நிறைய உணவு எஞ்சியது என்று நற்செய்தியாளர்கள் கூறுகின்றனர். மக்கள் தம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளும் போது அது பன்மடங்காகப் பலுகும்என்ற உண்மைதான் புதுமை! இதை இயேசு மக்களுக்கு உணர்த்தினார்.

'உள்ளங்கள் பலவிதம் எண்ணங்கள் ஆயிரம்; உறவுகள் வளர்வதற்கு மனம் தானே காரணம்' என்றுபாடுகிறான் கவிஞன்.

''அரபிக் குதிரையானாலும் பிறவிக்குணம் போகாது'' என்பது முதுமொழி. சமகால நிகழ்வுகளை நாம் பார்க்கும் போது பகிர்தலின் உண்மை புலப்படவில்லையா? எமக்கு எமக்கு என்று எல்லாவற்றையும் நோக்கினோம்; கட்டிய வீடு எங்கே;, வெட்டிய கிணறு எங்கே; தீட்டிய திட்டங்கள் எங்கே; சேர்த்த சொத்துக்கள் எங்கே; உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஊர் ஊராக அலைகின்றோம்.

கி. மு. 537 ஆம் ஆண்டில் ஏறைக்குறைய 50 – 70 வருடங்களாக பபிலோனியாவில் அடிமைகளாக வாழ்ந்த யூத மக்களுக்கு சீருஸ் மன்னன் விடுதலை கொடுத்து சொந்த நாட்டிற்கு வழியனுப்பி வைத்தான். ஆனால் சிலபேர் அங்கேயே தங்கிவிட்டார்கள். பாதிப்பேர் வேறு நாடுகளுக்குச் சிதறிச் சென்றுவிட்டார்கள். சொற்பப் பேர் மாத்திரம் தங்கள் சொந்த மண்ணுக்கு வந்தார்கள். அதே போல் யாழ். மண்ணில் ஏற்பட்ட இடம்பெயர்வினால் வன்னி சென்றவர்கள் சிலர் வன்னியிலும், சிலர் வெளிநாட்டிலும், சிலர் சொந்த மண்ணிலும் திரும்பவும் குடியமர்ந்துள்ளார்கள்.

இவ்வளவு அவலங்கள், அனர்த்தங்கள்மத்தியிலும்எம் வாழ்விலே மாற்றம் கண்டோமா? பகிர்தலின் சிறப்பை அனுபவிக்கின்றோமா? எமது ஆற்றல்கள், திறமைகள், வளங்கள் முதலியவற்றை இல்லாதவர்களுடன் பகிர எம்மில் எத்தனைபேர் முன் வருகின்றோம்?

ஒவ்வொரு மனித உள்ளமும் நிம்மதியுடன் வாழ்வதற்கு அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை என்பன தேவை. இன்று இந்த மூன்றும் அற்ற நிலையில் தான் எம் வாழ்வு கடந்து போகின்றது. எந்த வகையான பிரச்சினை தலைதூக்கினும் பிறர்தேவைகளில், நான் என்னைப் பகிர்ந்துவாழும் போது உண்மையாகவே எம்மில் அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை உதயமாகும். எம்மவர் மத்தியிலே மாபெரும் புதுமை நிகழும். இதற்கு நாம் தயாரா? சிந்திப்போம்.

—எஸ். அந்தோனிப்பிள்ளை.

## ஞாயிறு நற்பிரசாதம்

## நாளை

### ஆடி 19

திங்கட்கிழமை

திதி: பிரதமை பிற்பகல் 3.57 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம் பிற்பகல் 4.04 வரை.

சுபநேரம்: 12.04-1.34

ராகுகாலம்: 7.34 9-04

(பகல் ... இரவு ... பஞ்சாங்க நோக்கப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மீண்டும் யாழ். நகரில்!

அழகுக்கு அழகு தரும் அழகு சாதனப் பொருள்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

# ஜெயா அழகு மாடம்

**[ JEYA FANCY ]**

**127, கஸ்தூரியார் வீதி,**
( முன்னைய Happy Tex )
**149, 168 நவீன சந்தை,**
**யாழ்ப்பாணம்.**

(48771)


# மரண அறிவித்தல்கள்

## கனகசுந்தரம் பூலோகராசா

(உரிமையாளர், ராசி சில்க், யாழ்ப்பாணம்- கொழும்பு)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் பூலோகராசா 31-07-97 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார்காலஞ்சென்ற கனகசுந்தரம்—நல்லம்மா தம்பதிகளின் மூத்தமகனும், காலஞ்சென்ற துரையப்பா—செல்லம்மா தம்பதிகளின் மருமகனும்பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சசிதரா(கனடா), சசிதரன் ( ராசி சில்க், யாழ்ப்பாணம் ), ரவிதரன் (ராசி சில்க், கொழும்பு), லலிதரா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு ( கனடா - கணக்காளர் ), கோமளவதனி, ஜெயந்தி, சரவணபவான் (சென்னை மருத்துவக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வினோ, டினோ, நிராஜ், கோபிகா, மிதுன்ராஜ், அபிஷேக், ஹரிஜா, உதிஸ்ரா, ஹரிகிஷாந், பாலாஜி, சத்தியா, பிரசாந் ஆகியோரின் அன்புப் பேரனும், விக்கிராசா, காலஞ்சென்ற சேனாதிராசா மற்றும் துரைராசா, பற்குணராசா, இந்திராணி குணசிங்கம், ஜெயராணி கனகலிங்கம், பொன்ராசா, காலஞ்சென்ற யோகராசா (பஞ்சு) ஆகியோரின் மூத்த சகோதரரும், சிவபாக்கியம் சொக்கலிங்கம், ஞானேஸ்வரி சேனாதிராசா, கனகேஸ்வரி அரசரெட்ணம், து. கருணாகரன், து. சிவராம் (முகாமையாளர், இலங்கை வங்கி, முல்லைத்தீவு), து. சத்தியசீலன் (அதிபர், யாழ். கரவெட்டி கிழக்கு அ. த. க. பாடசாலை ), து. அம்பிகைராஜன் ( பிரான்ஸ் ), து. தேவலோஜினி ( லண்டன் ), செல்வலோஜினி கேதாரநாதன், குணசிங்கம் (கோபிகா ஆடையகம்), கனகலிங்கம் (நாரந்தனை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-08-97) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
பூ. சசிதரன்
(மகன் - ராசி சில்க், யாழ்ப்பாணம்)

230, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(48777)

## கந்தசாமி சுலோஜனாதேவி (ரதி)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் விதானையார் வீதி ஈச்சமோட்டையில் வசித்தவருமாகிய கந்தசாமி - சுலோஜனாதேவி (ரதி) வவுனியாவில் காலமானார்.

இவர் கந்தசாமியின் அன்பு மனைவியும், பரமசாமி, காலஞ்சென்ற யோகம்மா (மகேஸ்) அவர்களின் அன்பு மகளும், திரு. திருமதி செல்லப்பாவின் அன்பு மருமகளும், காயத்திரி (பிரான்ஸ்), கம்சவர்த்தினி (கொழும்புத்துறை, இ.ம.வி. மாணவி), கமலக்கண்ணன் (மாணவன், யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சமூகபாலன் (பாலன், பிரான்ஸ்), சாரதாதேவி(வலி, கிளிநொச்சி), சந்திரபாலன்(ரகு, பிரான்ஸ்), ஜெயபாலன் (ஹொலண்ட்), இந்திரபாலன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜமலர் (பிரான்ஸ்), பேரின்பநாதன் (தேவிகாஸ், கிளிநொச்சி), அருந்ததி (பிரான்ஸ்), கௌசலா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02-08-97 அன்று வவுனியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. பரமசாமி
(தகப்பனார்)

15/21, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி

(48766)

## திருமதி அ. தாஷ்யாணி அம்மா

ஆவரங்காலைச் சேர்ந்த திருமதி அ. தாஷ்யாணி அம்மா காலமாகி விட்டார்.

அன்னார் அண்ணாசாமிஐயர் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் டாக்டர் அ. ஸ்ரீ மகாதேவன், அ. பஞ்சாபகேச சர்மா (மக்கள் வங்கி) அ. மறைக்காடர் (ஆசிரியர்), அ. சத்தியோயாதன் (றெட்பானா இணைப்பதிகாரி), திருமதி வே. கல்யாணி, அ. சுந்தரராஜன், திருமதி யோ. கௌரி (ஆசிரியை) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரதுபூதவுடல் தகனக்கிரியைக்காக 3-8-97 இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1-00 மணியளவில் ஆவரங்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
S. அண்ணாசாமிஐயர்

சிவன்கோயிலடி,
ஆவரங்கால், புத்தூர்.

(48772)

## காங்கேசன் தபாலகம் சுன்னாகத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 3

தற்காலிகமாக யாழ் பிரதம தபாலகத்தில் இயங்கி வந்த காங்கேசன்துறை தபாலகம் சென்ற வெள்ளிக்கிழமையில் இருந்து சுன்னாகம் றொட்டியாலடிப் பகுதியில் கே. கே. எஸ். வீதியில் உள்ள தனியார் வீடொன்றுக்குத் தற்காலிகமாக இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை அஞ்சலகத்துக்கு உட்பட்ட பொது மக்கள் தங்களது கருமங்களை தற்போது இயங்கும் இடத்தில் நிறைவேற்ற முடியும் என்று காங்கேசன்துறை தபாலதிபர் சு. திருப்பரங்கிரிநாதன் தெரிவித்துள்ளார்.

(இ-4)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஓகஸ்ட் 3

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ் மாநகர சபை ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தலைமையில் நல்லூர் இந்து விடுதியில் உள்ள அலுவலகத்தில் நடைபெறும்.

உற்சவகாலங்களில் தொண்டர் சேவையாற்றும் பொது அமைப்புகளின் பதவியாளர்களை அதில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.தெய்வேந்திரன் கேட்டுள்ளார்.

(ஐ-30)

## இராணுவத்துக்கு தாக்குதல் பற்றி முன்னரே தகவல்

வெள்ளி இரவு தாக்குதல் நடத்துவதற்கு முதல் புலிகள் காவை வேவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் —

இவர்களில் மூவரை படையினர் கட்டுக்கொன்றிருந்தனர் என்றும் —

இதனால்இவ்வாறான தாக்குதல் ஒன்றை தாம் எதிர்பார்த்திருந்ததால் தங்களால் எதிர்த்தாக்குதல் நடத்த முடிந்தது எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலை மேற்கொள்ள வந்த புலிகளை உள்ளே வர இடமளித்து பின்னர் தாக்கியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-4)

## படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

மற்றும் இராணுவத்தினர் தரப்பில் 40 பேரும் கொல்லப்பட்டதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஆனால் புலிகள் தரப்பில் 300 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

எனினும் இத்தாக்குதலில் 51 படையினர் பலியானதாகவும் 60 படையினர் காயமடைந்ததாகவும் ''புலிகளின் குரல்'' வானொலி தெரிவித்தது.

புலிகள் தரப்பு உயிரிழப்பு விவரங்கள் கிடைக்கவில்லை என்றும் ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது.

தாக்குதலில் படையினருக்குப் பெரும் ஆயுத இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

தாக்குதலில் 50க்கும் மேற்பட்ட படையினர் இறந்ததாக பி.பி.ஸி. மற்றும் அகில இந்திய வானொலி தெரிவித்தன.

படையினர் தரப்பில் 250 பேர் வரை காயமடைந்த போதிலும் 75 பேர் மட்டும் வவுனியா, அனுராதபுரம் மற்றும் கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதாகவும், புலிகளிடம் இருந்து பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் மற்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

(இ-10)

## நேற்றுக் காலை.....

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸாரின் டிரக், தண்ணீர் பவுசர்கள் மற்றும் ஜீப்புகள் ஆகியனவற்றுக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

சனிகாலை காயமடைந்தவர்களை ஏற்றிவந்த அம்புலன்ஸ் மீதும் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். வவுனியா மருத்துவமனையில் போதிய அளவு அம்புலன்ஸ் வாகனங்கள் இல்லாததால் காயமடைந்தவர்களை மருத்துவ மனைக்குக் கொண்டு செலவதில் தாமதம் ஏற்பட்டது. பாதுகாப்புப் படையினருக்கு இந்தத் தாக்குதலைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பு இருந்ததாகக் கூறப்படுகிறது.

வெள்ளி காலை ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் இறுதியாகக் கைப்பற்றப்பட்ட பகுதி மீது புலிகளின் தற்கொலைப் படையினர் தாக்குதலை மேற்கொள்ள முயன்றனர் எனவும் ஆனால் இராணுவம் பதில் தாக்குதலை மேற்கொண்டபோது மூன்று புலிகள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சூழ்நிலையில் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொள்ளலாம் என எதிர்பார்த்திருந்தால் அவற்றைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால் படையினர் இவ்வாறான தாக்குதலை எதிர்கொள்ள தயாராய் இருந்ததாகவோ அதற்கான பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்டதாகவோ தெரியவில்லை.

கேள்வி: முன்னேறிக் கொண்டிருந்த படையினர் மீதா? அல்லது பின்னணியில் இருந்த படையினர் மீதா? தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது?

பதில்: ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் போது ஓமந்தை நகரை இராணுவம் கைப்பற்றுவதற்கு முன்னர் அவர்கள் தரித்து நின்ற பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கேள்வி: நேற்றைய தாக்குதலில் பொலீஸாருக்கா அல்லது கடற்படையினருக்கா இழப்புகள் அதிகம்?

பதில்: பலத்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது பொலிஸாருக்காகும். அதற்கு அடுத்ததாக உயிர்சேதத்தைப் பொறுத்த வரையில் இராணுவத்தினருக்கே ஏற்பட்டுள்ளது. முதலில் கடற்படை முகாம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும்கடற்படையினரின் உடைமைகளுக்கோ உயிருக்கோ குறிப்பிடத்தக்களவு இழப்புகள் ஏற்படவில்லை.

சனி பிற்பகல் 2 00 மணி வரை புலிகள் தாக்குதல் இடம்பெற்ற இடங்களில் இருந்தனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆட்லறி மற்றும் வான் தாக்குதல்கள் மூலம் புலிகளின் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இது உண்மையாக இருக்கலாம். ஏனெனில் சனிக்கிழமை காலை தாக்குதல் இடம்பெற்ற இடத்துக்கு வாகனங்கள் எவையும் செல்ல முடியாதிருந்தது. ஆனால் பிற்பகல் அளவில் காயப்பட்ட அனைவரையும் அங்கிருந்து கொண்டுவரக் கூடியதாக இருந்தது.

(இ-10)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் பாலசுந்தரம்

(பாலா)

(இளைப்பாறிய காப்புறுதிக் கூட்டுத்தாபன காசாளர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் பாலசுந்தரம் 2-8-97 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் தம்பதிகளின் அருமைப் புதல்வனும் புனிதவதியின் (மகேஷ்) அன்புக் கணவரும், பிறேம்ராஜ் (சுவிஸ்), சாந்தராஜ் (கனடா), பிறேமலதா (கனடா), மஞ்சுளா, தனராஜ் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

தகவல்:
புனிதவதி பாலசுந்தரம்
(மனைவி)

181/5, டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை,
வெள்ளவத்த,
தொலைபேசி: 594486

# கண்ணீர் அஞ்சலி

## பொன்னம்பலம் பாலசுந்தரம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன காசாளர் பொன்னம்பலம் பாலசுந்தரம் (பாலாண்ணை) அவர்கள் கொழும்பில் 2-8-97 இல் காலமான செய்திகேட்டு கவலை அடைகின்றோம். அன்னார் தம் வாழ்நாளில் எமது ஆலயத்தில் நடைபெற்ற அனைத்துத் திருப்பணிகளிலும், விசேடமாக மஞ்சத் திருப்பணியிலும் இரண்டறக் கலந்து செயலாற்றியவர். இவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞானவைரவப் பெருமானை வேண்டிநிற்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பரிபாலன சபை
ஞானவைரவர் தேவஸ்தானம்
கலட்டிப்புலம் ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(48768)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org